இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சமூகவிஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி - மட்டம் I,
இறுதிப் பரீட்சை -2006
பொருளியலின் அடிப்படைகள் – SSF 1303
காலம் : மூன்று (3) மணித்தியாலங்கள்

திகதி : 26.11.2006 நேரம் : மு.ப. 9.00 – 12.00 வரை

ஐந்து (5) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு (1) வினாவையேனும் தெரிவு செய்க.
வரைபடம் , தரவுகள் , உதாரணங்கள் என்பன பயன்படுத்தப்படுமிடத்து கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.
ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
வரைபடத் தாள் வழங்கப்படும்.

பகுதி – 1

1. பின்வரும் எண்ணக்கருக்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
   (அ) அருமை
   (ஆ) சந்தர்ப்பச் செலவு
   (இ) இலவசப் பண்டங்கள்
   (ஈ) உற்பத்தி சாத்திய வளையி

2. (அ) எந்தவொரு சமூகமும் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் யாவை?
   (ஆ) முதலாளித்துவப் பொருளாதார முறைமையில் இவ்வடிப்படைப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன.

3. பின்வரும் சோடிகளுள் ஏதாவது இரண்டுக்கு சிறுகுறிப்பு எழுதுக.
   (அ) மூலதன செறிவான தொழில்நுட்பமும் ஊழியச் செறிவான தொழில்நுட்பமும்
   (ஆ) தொழில் பிரிவும் சிறப்புத் தேர்ச்சியும்
   (இ) நிலமும் மூலதனமும்

LIBRARY

பகுதி 2

4. (அ) கேள்வி விதியினை வரைவிலக்கணப்படுத்துக.

(ஆ) சந்தை சமநிலை என்ற எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.

(இ) மிகை நிரம்பல் என்ற எண்ணக்கருவினை வரைபடங்களைக் கையாண்டு விளக்குக.

5. பின்வரும் சோடி எண்ணக்கருக்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(அ) நேரான கேள்வியும் வழிவந்த கேள்வியும்.

(ஆ) புள்ளி கேள்வி நெகிழ்ச்சியும் வில் கேள்வி நெகிழ்ச்சியும்

(இ) கேள்வி மாற்றமும் கேள்வித்தொகை மாற்றமும்

6. பின்வரும் அட்டவணை ஆடைக்கான கேள்வி, நிரம்பல் பற்றியதாகும். (வரைபடத் தாளைப் பயன்படுத்தி வினாவுக்கு விடையளிக்குக.)

விலை	கேள்வி	நிரம்பல்
2	360	120
4	320	200
6	280	410
8	240	620
10	200	840

(அ) இப்பண்டத்தின் கேள்வி, நிரம்பல் கோடுகளை வரைக.

(ஆ) சந்தைச் சமநிலை விலை, தொகை என்பனவற்றைக் குறிப்பிடுக.

(இ) ரூபா 3 விலையில் தோன்றும் இப்பண்டத்திற்கான சந்தை நிலைமையை விளக்குக.

பகுதி 3

7. (அ) தேசிய வருமானம் என்ற எண்ணக்கருவினை வரைவிலக்கணப்படுத்துக.

(ஆ) தேசிய வருமான தரவுகளின் கணிப்பீட்டு முறை ஒன்றினை விளக்குக.

(இ) இரட்டைக் கணிப்பு என்பதிலிருந்து நீர் கருதுவதென்ன? இரட்டைக் கணிப்புப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குள்ள இரண்டு முறைகளைத் தருக.

8. (அ) இலங்கைப் பொருளாதாரத்திலுள்ள மூன்று பிரதான துறைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(ஆ) தேசிய வருமானக் கணிப்பீட்டில் இருந்து தவறவிடப்படும் பொருளாதார செயற்பாடுகளை விளக்குக.

(இ) தேசிய வருமானம் என்ற எண்ணக்கரு தொடர்பாக தெரிவிக்கப்படும் முக்கிய விமர்சனங்களை எழுதுக.

9. பின்வருவனவற்றில் நான்கிற்கு(4) சிறுகுறிப்பு எழுதுக.

(அ) வருமான வட்டப் பாய்ச்சல்

(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி

(இ) வெளிநாட்டிலிருந்தான காரணி வருமானம்

(ஈ) பேரினப் பொருளியல்

(உ) பொருளாதார அபிவிருத்தி

*** பதிப்புரிமையுடையது ***